**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons), மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**

**2057, திருவள்ளுவர் ஆண்டு, பராபவ வருடம், சித்திரை மாதம் 3–ம் தேதி**

**2026– ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16–ம் நாள் வியாழட்கிழமை**

**அசல் வழக்கு எண் –7/2023**

**C.N.R.No.TNSV15000318–2023**

---

1. ரா.ஈஸ்வரன்
2. ரா.ராஜாஜி
3. ரா.ராஜபாண்டி .....வாதிகள்

**/எதிர்/**

க.செல்வி ......பிரதிவாதி

இவ்வழக்கு என் முன்பாக 02.04.2026–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.SPT,சேதுராமச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சுப்பராயன் அவர்கள் ஆஜராகியும், இவ்வழக்கின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை இருதரப்பு ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியமானது என விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக தாவா சொத்துக்களை வாதிகள் அமைதியாக அனுபவம் செய்து வருவதை பிரதிவாதியோ, பிரதிவாதி வகையாட்களோ, யாதொரு தடையோ, இடைஞ்சலோ அக்கிரம பிரவேசமோ செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், செலவுத் தொகைகளை வாதிகளுக்கு பிரதிவாதி கொடுக்க உத்தரவிட வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) வாதிகள் தரப்பு வழக்குரையின் சுருக்கம்:**

தாவாச் சொத்துக்களும் ஆதியில் சி.ராசுத்தேவர் என்பவருக்கு பாத்தியமானதாகும் என்றும், மேற்படியார் இறந்த பின்னீடு மேற்படியாரின் வாரிசுகள் ஆன சி.ரா.ஆதிமூலம் –1, சி.ரா.ராமுத்தேவர் ஆகியோர்கள் பூர்வீக பாத்தியத்தில் அடைந்து அனுபவித்து வந்தார்கள் என்றும், குடும்பத்தில் மூத்தவர் என்பதால் எஸ்.எல்.ஆர். காலத்தில் சி.ரா.ஆதிமூலத் தேவர் பெயரில் பட்டா ஏற்பட்டிருந்தது

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.16 14:39:12 +0530

என்றும், பின்னீடு 30.07.1967ம் தேதி சி.ரா. ஆதிமூலத் தேவரும் சி.ரா.ராமுத்தேவரும் பாகம் செய்து, மேற்படி பாகப்பிரிவினையில் தாவாச் சொத்துக்களும் இந்த வாதிகளின் தந்தையான சி.ரா.ராமுத்தேவருக்கு கிடைத்து அன்றே சி.ரா.ராமுத்தேவர் சுவாதீனம் அடைந்து தனது தனித்த பாத்தியத்தில் வைத்து கடந்த 30.07.1967ம் தேதி முதல் அனுபவித்து வருகிறார்கள் என்றும், மேற்படி சி.ரா.ராமுத்தேவர் அனுபவம் செய்து வருவதைத் தொடர்ந்து மேற்படி சி.ரா.ஆதிமூலத்தேவருக்கு தெரிந்தே 31.07.1974ம் தேதியில் பட்டா எண் 1191 & 522 ஆக நில உடமை குறிப்பேடு பட்டா பாஸ் புத்தகம் இந்த வாதிகளின் தந்தையான சி.ரா.ராமுத்தேவர் பெயருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், அதுவும் சி.ரா. ஆதிமூலத் தேவருக்கும் நன்கு தெரியும் என்றும், சி.ரா.ஆதிமூலத் தேவரும் கடந்த 30.05.1982ம் தேதி இறந்துவிட்டார் என்றும், தாவாச் சொத்துக்கள் மானாமதுரை வட்டாட்சியர் அலுவலத்திலிருந்து 31.07.1974ம் தேதிய நில உடைமை குறிப்பேடு பாஸ்புத்தகமும் இந்த வாதிகளின் தந்தையான சி.ரா. ராமுத்தேவர் பெயரில் பட்டா எண் 1191 & 522 ஆக இருந்து வந்ததை மேற்படி சி.ரா.ஆதிமூலத்தேவர் இறக்கும்வரை யாதொரு மறுப்பும் தெரிவிக்கவில்லை என்றும், மேற்படி பட்டாவை எதிர்த்து யாதொரு வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றும், தாவாச் சொத்துக்கள் 31.07.1974ம் தேதியில் மானாமதுரை வட்டாட்சியர் அவர்கள் இந்த வாதிகளின் தந்தையான சி.ரா. ராமுத்தேவர் பெயரில் பட்டா எண் 1191 & 522 ஆக ஏற்பட்டிருந்ததை தொடர்ந்து யு.டி.ஆரிலும் தாவாச் சொத்துக்கள் இந்த வாதிகளின் தந்தை சி.ரா. ராமுத்தேவர் பெயரில் பட்டா எண் 1197 ஆக பட்டா ஏற்பட்டு தொடர்ந்து சி.ரா.ராமுத்தேவர் அவர்களும் தொடர்ந்து விவசாயம் செய்தும், அரசுக்கு வரி செலுத்தியும் அனுபவித்து வந்தார் என்றும், மேற்படி சி.ரா. ராமுத்தேவர் கடந்த 22.12.2008ம் தேதியில் இறந்தபிறகு வாரிசுக்கிரமத்தில் இந்த வாதிகள் அடைந்து தொடர்ந்து தங்களது தனித்த பாத்தியத்தில் வைத்து பூர்வீக பாத்திய அடிப்படையில் அனுபவித்து வருவதில் இந்த வாதிகளுக்கும் தாவாச் சொத்துக்களில் Priscriptive title – சித்தித்துள்ளது என்றும், இந்த வாதிகளும் தாவாச் சொத்தில் தொடர்ந்து விவசாயம் செய்து அரசாங்கத்திற்கு வரி செலுத்தி தங்களது தனித்த பாத்தியத்திலும் தங்களது Effective possission – ல் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றும், தாவாச் சொத்துக்களில் இந்த பிரதிவாதிக்கு யாதொரு பாத்தியமோ உரிமையோ அனுபவமோ எந்தக் காலத்திலும் கிடையாது என்றும், இந்த பிரதிவாதியும் சிவகங்கை மாவட்ட வருவாய் அதிகாரி அவர்களிடம் யுடிஆரில் ஏதோ தவறுதலாக சி.ரா.ராமுத்தேவர்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.16 14:39:17 +0530

பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றும் அதையும் ரத்து செய்யக்கோரி பொய்யான சங்கதிகளை கூறி சீராய்வு மனு எண் ந.க.பி4/27343/2020 ஆக கடந்த 02.06.2020ம் தேதியில் மனுத்தாக்கல் செய்துள்ளார் என்றும், அதுவும் சட்டப்படி Maintainable ஆகக்கூடியதல்ல என்றும், இந்த வாதிகளின் விரோதிகளின் தூண்டுதலின் பேரில் தாவாச் சொத்துக்களில் இந்த பிரதிவாதியும் அக்கிரம பிரவேசம் செய்யப்போவதாகவும், தடையும் இடைஞ்சலும் செய்யப் போவதாகவும் கடந்த 05.01.2023ம் தேதிமுதல் பிரஸ்தாபித்து வருகிறார் என்றும், அவ்விதம் இந்த பிரதிவாதி செய்துவிடும் பட்சத்தில் இந்த வாதிக்கும் மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும், ஆதலால் தாவாச் சொத்துக்களும் இந்த வாதிகளுக்கு பாத்தியமானது என விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக தாவாச் சொத்துக்களை இந்த வாதிகள் அமைதியாக அனுபவம் செய்து வருவதை இந்த பிரதிவாதி யாதொரு தடையோ, இடைஞ்சலோ, அக்கிரமபிரவேசமோ செய்யக்கூடாது என ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்:-**

வாதிகளின் தாவா புரட்டு வாதிகளுக்கு அவர்கள் கோரும் பரிகாரங்கள் யாதொன்றும் கிடைக்கத்தக்கதில்லை என்றும், பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர இதர விசயங்கள் யாவும் உண்மைக்குக்கு மாறானவை என்றும் அடிப்படையற்றவை என்றும் ஆட்சேபிக்கப்படுகிறது. வாதிகள் தாவா எனக் குறிப்பிடும் புலஎண்.209/2 என்ற 1வது லக்கச் சொத்தும் மேலக்கரிசல் நிலம் என்றும் கொக்குலாஞ்சேரி புஞ்சை என்றும் அழைப்பதுண்டு 2வது லக்கச் சொத்து அம்மன் கோவில் அருகில் உள்ள நாத்தாங்கல் என்று அழைக்கப்படுவதுண்டு மேற்படி தாவாஇரண்டு லக்கச் சொத்தும் இந்த பிரதிவாதியின் தாய் வழி தாத்தாவான சி.ரா.ஆதிமூலத்தேவருக்கு பாத்தியமான பூர்விகச் சொத்துக்கள் என்றும், மேற்படி தாவாச் சொத்துக்கள் உள்ளிட்ட சொத்துக்களும் பல ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டில் மேற்படி சி.ரா.ஆதிமூலத்தேவருக்கு பாகத்திற்கு கிடைத்து மேற்படியரால் தனித்து அனுபவம் செய்து வரப்பட்ட சொத்துக்கள் என்றும், மேற்படி சி.ரா.ஆதிமூலத்தேவரின் ஒரே வாரிசு அவருடைய மகள்வழிப் பேத்தியான இந்த பிரதிவாதி ஆவார். இதன் அடிப்படையில் மேற்படி சி.ரா.ஆதிமூலத்தேவரின் இறப்பிற்குப் பிறகு அதாவது 1982முதல் தாவா இரண்டுலக்கச் சொத்துக்களையும் வாரிசு அடிப்படையில் பிரதிவாதி அடைந்து நாளதுதேதிவரை அனுபவம் செய்து வருகிறார்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.16 14:39:21 +0530

என்றும், இச்சூழ்நிலையில் இந்த பிரதிவாதியும் தாவாச் சொத்துக்கள் சம்பந்தமாக கடன்பெற நடவடிக்கை எடுத்த பொழுதுதான் UDR காலத்தில் தவறுதலாக பட்டா எற்பட்ட விபரம் தெரிய வந்தது என்றும், இந்த பிரதிவாதியும் சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலர் நீதிமன்றத்தில் ந.கபி4/27343/2020 என்ற நம்பரில் இந்த வாதிகளின் தந்தை ராசுத்தேவர் மகன் ராமுத்தேவர் பெயரில் தவறுதலாக ஏற்பட்ட பட்டாவை ரத்து செய்து விட்டு இந்த பிரதிவாதி பெயருக்கு பட்டா மாறுதல் செய்திடக்கோரி மனுத்தாக்கல் செய்திருந்தார் என்றும், அந்த மனுவிற்கு இந்த வாதிகள் தங்கள் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி பொய்யான காரணங்கக்கூறி எதிர் உரையும் தாக்கல் செய்துள்ளனர் என்றும், மேலே கண்ட வருவாய்த்துறை நடவடிக்கையில் கண்ட சங்கதிகளுக்கு மாறாக வாதிகள் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மேலும் மேற்படி வருவாய்த்துறை நடவடிக்கையில் வாதிகளுக்கு எதிராக உத்தரவு ஏற்பட்டுவிடும் என்ற எண்ணத்திலயே பொய்யான விபரங்களை கூறி இப்புரட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மேற்படி வருவாய்துறை நடவடிக்கையில் வாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் உரையில் தாவாபுலஎண்.209/2 மற்றும் 367/14 ஆகிய இரண்டுலக்கச் சொத்தும் கடந்த 1967—ம் ஆண்டு ஆடி மாத்தில் வாய்மொழியாக ஏற்பட்ட பாகப்பிரிவினையில் வாதிகளின் தகப்பனார் ராமுத்தேவர் பாகத்திற்கு கிடைத்தாகக் கூறுவதும் ஒப்புக்கொள்ளபட்டவில்லை என்றும், மேலும் 1967—ம் ஆண்டியிலயே ராமுத்தேவர் பெயருக்கு பட்டா ஏற்பட்டதாகவும் மானாமதுரை வட்டாட்சியர் வாதிகளின் தகப்பனார் ராமுத்தேவர் பெயருக்கு 31.07.1974—ம் தேதியில் பட்டா எண்.1191 மற்றும் 522 ஆக நிலஉடமைக் குறிப்பேடு பட்டா பாஸ்புத்தகம் வழங்கப்பட்டதாகக் கூறியுள்ள அனைத்து சங்கதிகளும் உண்மையானதல்ல அதுவும் போர்ஜரியாக வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டு இருப்பதைத்தவிர உண்மையான ஆவணமில்லை என்றும், மேற்படி பட்டா பாஸ்புத்தகத்தின் அடிப்படையில் வாதிகள் கோரும் எவ்வித உரிமைகளும் வாதிகளுக்கு சட்டப்படி கிடைக்ககூடியதில்லை என்றும், வாதிகளும் கடந்த 1967—ம் ஆண்டு வாய்கரலாக எற்பட்ட பாகத்தில் வாதிகளின் தகப்னார் ராமுத்தேவர் பாகத்திற்கு தாவாச் சொத்து கிடைத்தாக கூறியுள்ள நிலையில் இதற்குமாறாக மானாமதுரை உரிமையியல் நீதிமன்றத்தில் இந்த வாதிகளின் தகப்பனாரான ராமுத்தேவருக்கும் இந்த பிரதிவாதிக்குமிடையே நடைபெற்ற முன் வழக்கான OS No.32/1999 என்ற எண்ணுள்ள அசல் வழக்கில் 29.07.1974—ம் தேதி பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் எழுத்துப்பூர்வமாக பாகவிஸ்தி

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.04.16 14:39:26 +0530

எழுதிக்கொண்டதாகவும் கூறி அதற்கு அத்தாட்சியாக மேற்படி பாகவிஸ்தி ஆவணத்தை Exbit A5 ஆவணமாக நீதிமன்றத்தில் மேற்படி OS No.32/1999 வழக்கின் வாதியான இந்த வாதிகளின் தகப்பனார் ராமுத்தேவர் தாக்கல் செய்து வழக்கு நடைபெற்றுள்ள நிலையில் அதற்குமாறாக 1967–ம் ஆண்டு வாய்க்கரலாக பாகம் ஏற்பட்டதாக வாதிகள் முன்னுக்குப்பின்முரனான சங்கதிகளைக்கூறி தாவா வழக்கையும் தாக்கல் செய்துள்ளனர் என்றும், மேலே கண்ட சங்கதிகளின் அடிப்படையில் வாதிகள் குறிப்பிடும் 31.07.1974–ம் தேதியிட்ட பட்டா நடவடிக்கையும் மோசடியானது என்பதும் நன்கு தெரியவரும் மூன்றாம் நபர்களுக்கு கிரையத்தின் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்களையும் சேர்த்து வாதிகளின் தகப்பனார் பெயரில் ஏற்பட்டதாக கூறும் 31.07.1974தேதியிட்ட பட்டாபாஸ்புத்தகமும் வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பது விளங்கும் தனக்கு உரிமையில்லாத சொத்துக்களைப் பொறுத்து மோசடியாக உருவாக்கப்பட்டதுதான் வாதிகள் குறிப்பிடும் 31.07.1974–ம் தேதியிட்ட பட்டா பாஸ்புத்தகம் என்றும், எந்த வகையில் பார்த்தாலும் வாதிகளின் வழக்கும் சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் வாதிகள் எவ்வித உரிமையும் கோரமுடியாது என்றும், வாதிகளின் பிராதில் கூறியுள்ள வியாஜ்ஜியமுலமும் உண்மையானதல்ல இந்த பிரதிவாதியைப் பொறுத்து கூறியுள்ள வியாஜ்ஜியமும் கற்பனையானது என்றும், வாதிகளின் முன் நடவடிக்கை ஒப்புதல் காரணமாக வாதிகளின் வழக்கும் Estoppel தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வாதிகளின் வழக்கும் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வாதிகளும் Material விஷயங்களை மறைத்து தாக்கல் செய்துள்ள வழக்கும் எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக்கூடியதாய் இருக்கிறது என்றும், வாதிகளும் சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தினை அனுகவில்லை அந்த வகையிலும் இவ்வழக்கு சட்டப்படி நிலை நிற்கக்கூடியதில்லை என்றும், எனவே வழக்கை பிரதிவாதி தரப்பு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய உத்தரவிட வேண்டி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) எழுவினாக்கள்:–**

வாதியின் வழக்குரை மற்றும் பிரதிவாதியின் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பரிசீலனை செய்து கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

3.1) தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்ட அவர் அனுபவத்தில் இருந்து வரும் சொத்தா?

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.16 14:39:31 +0530

3.2) வாதிகள் கோரும் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

3.3) இவ்வழக்கு முரண் தடை தோஷத்தால் பாதிக்கப்பட்டு உள்ளது என்பது உண்மையா?

3.4) தரப்பினருக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன?

4) வாதிகள் தரப்பில் 2ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் வாதிகள் தரப்பில் வா.சா.2 ஆக மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஷ்வரர் திருக்கோவிலின் கண்காணிப்பாளர் விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி வா.சா.2 மூலம் வா.சா.ஆ.7 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் ஆதிஸ்வரி என்பவர் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் எவ்வித ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்த போது பி.வா.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.வா.சா.1 மூலம் பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ.26 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் பிரதிவாதி திரும்ப அழைக்கப்பட்டு கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து பி.வா.சா.ஆ.27 முதல் பி.வா.சா.ஆ.29 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மீண்டும் பிரதிவாதி தரப்பில் அம்பலம் என்பவர் பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் ஆவணம் குறியீடு செய்யப்படவில்லை. மேலும் பிரதிவாதி தரப்பில் நாகேஸ்வரன் என்பவர் பி.வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு, சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், பிரதிவாதி தரப்பில் வீரபத்திரன் பி.வா.சா.4 விசாரிக்கப்பட்டு சா.சா.ஆ.6 மற்றும் சா.சா.ஆ.7 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை செய்யும் போது பி.வா.சா.ஆ.30, 31 பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5)தாவா சொத்து ஆதியில் ராசுதேவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் ஆகும். மேற்படி ராசுதேவருக்கு சி.ரா.ஆதிமூலதேவர்–1 மற்றும் சி.ரா.ராமுதேவர்–2 என்ற இரண்டு மகன்கள் உள்ளனர். மேற்படி ராமுதேவரின் வாரிசுகள் தான் இந்த நம்பர் வாதிகள் ஆவார்கள். தாவா சொத்துக்கள் மேற்படி ஆதிமூலத்தேவர் மற்றும் ராமுதேவருக்கிடையே நடைபெற்ற

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.16 14:39:36 +0530

பாகப்பிரிவினையில் ராமுதேவருக்கு ஒதுக்கப்பட்டதாக வாதிகளும், ஆதிமூலதேவருக்கு ஒதுக்கப்பட்டதாக பிரதிவாதியும் கட்சி செய்து வந்து அவரவர் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் தாக்கல் செய்துள்ளனர். வாதிகள் தரப்பில் தாவா சொத்து ஆதிமூலதேவருக்கு எந்தகாலத்திலும் பாத்தியமானதாக இருந்தது இல்லை என்பதை பிரதான வாதமாகவும், பிரதிவாதி செல்வி மேற்படி ஆதிமூலத்தேவரின் மகள்வழி பேத்தி இல்லை என்பதை மற்றொரு வாதமாகவும் எடுத்துரைக்கப்பட்டது.

6) மாறாக, பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது எழுத்துமூல வாதுரையிலும் மற்றும் நீதிமன்றத்தில் எடுத்துரைத்த வாதுரையிலும் ஆதிமூலத்தேவரின் மகள் பிச்சைமுத்துவின் மகள் தான் இந்த பிரதிவாதி என்பதை அ.வ.எண்.32/1999ல் இந்த நம்பர் வாதிகளின் தகப்பனாருக்கும் இந்த நம்பர் பிரதிவாதிக்கும் இடையே நடைபெற்ற முந்தைய வழக்கில் கீழமை நீதிமன்றம் முதல் மாண்பமை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற 2வது மேல்முறையீடு வரை உறுதி செய்துள்ளனர் என்றும், மேலும் 1972ம் ஆண்டு வரையில் ஆதிமூலத்தேவர் பெயரில் தான் தாவா சொத்துக்களுக்கான வருவாய் ஆவணங்கள் இருந்து வந்ததாகவும், அதன் பின்னீடு யூடிஆர்–ல் ஏற்பட்ட குழறுபடியில் இந்த நம்பர் வாதிகளின் தகப்பனாரான ராமுத்தேவர் பெயரில் தாக்கலாகி விட்டது என்றும், மேற்படி வருவாய் ஆவணங்களில் தவறுதலாக வாதிகளின் தகப்பனார் பெயரில் ஏற்பட்ட பட்டா உள்பட இதர வருவாய் ஆவணங்களை ரத்து செய்து இந்த பிரதிவாதி பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்திட மாவட்ட வருவாய் அலுவலகத்தில் மேல்முறையீடு செய்திருப்பதாகவும், மேற்படி மேல்முறையீடு நிலுவையில் இருந்து வருகையில் இந்த நம்பர் அசல் வழக்கை வாதிகள் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு நிலுவையில் இருந்து வருகையில் மேற்படி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடத்தில் நடைபெற்ற மேல்முறையீட்டு நடவடிக்கையில் இந்த நம்பர் பிரதிவாதி பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டதாகவும், மேற்படி பட்டா மாறுதல் உத்தரவை பி.வா.சா.ஆ.27 ஆக பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்மூலம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கணிணி பட்டா பி.வா.சா.ஆ.28 ஆகவும், நிலவரி ரசீது பி.வா.சா.ஆ.29 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேற்படி பி.வா.சா.ஆ.27 ஆவணமானது வழக்கிற்கு பின்னீடு ஏற்பட்டது என்றும், மேற்படி உத்தரவில் மாவட்ட வருவாய் அலுவலர் இந்நிர் வழக்கு உத்தரவிற்கு கட்டுப்பட்டது என தெரிவித்து வழங்கியிருப்பதாகவும், வழக்கு நிலுவையில் இருந்து வருகையில் ஏற்பட்ட பட்டா

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.16 14:39:41 +0530

மாறுதல் உத்தரவு செல்லக்கூடியதல்ல என்றும் வாதிகள் தரப்பில் வாதுரை எடுத்துரைக்கப்பட்டது.

7) தாவா வழக்கானது முரண்தடை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து முதலில் தீர்மானிக்கவேண்டியது அவசியம் என்ற அடிப்படையில் எழுவினா 1 மற்றும் எழுவினா3க்கு கூட்டாக முடிவு காண இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>8)எழுவினா–1 மற்றும் 3</u>

தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்ட அவர் அனுபவத்தில் இருந்து வரக்கூடிய சொத்தா என்பதை தீர்மானிக்க வாதிகள் மற்றும் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலனை செய்வது அவசியம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. வாதிகள் தரப்பில் வாதிகளின் தகப்பனார் பெயரில் உள்ள பட்டா பாஸ்புத்தகம் அசல் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், ராமுதேவர் பெயரில் பட்டா எண்.1191 மற்றும் 522ல் ஏற்பட்ட பட்டா பாஸ்புத்தகம் என கண்டுள்ளது. அதில் தாவா சொத்து உள்பட 7 இலக்க சொத்துக்கள் கண்டுள்ளது. ஏதோ மேற்படி 7 இலக்க சொத்துக்களும் கிரையத்தின் அடிப்படையில் இந்த நம்பர் வாதிகளின் தந்தை ராமுதேவருக்கு கிடைத்ததாக கண்டுள்ளது. வாதிகளின் கூற்றுபடியே தாவா சொத்து வாதிகளின் தந்தைக்கு பூர்விக பாத்தியப்பட்டது என்ற நிலையில் வா.சா.ஆ.1 கிரையத்தின் அடிப்படையில் கிடைத்துள்ளது என்று கண்டுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்றும், வா.சா.ஆ.1 ஆவணம் நம்பத்தகுந்த ஆவணமாக இல்லை என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. வா.சா.ஆ.1ன் அடிப்படையில் ஏற்பட்டுள்ள வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மாவட்ட வருவாய் அலுவலகர் இடத்தில் இந்த எதிர்வாதி தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவின் நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலின் கண்காணிப்பாளர் மூலம் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.7 ஆவணத்தின் அடிப்படையில் கருப்பையா தேவருக்கும், பிச்சைமுத்துவிற்கும் கடந்த 14.09.1969ம் தேதியில் திருமணம் நடைபெற்றுள்ளது என்பதை அறிய முடிகிறது.

9) பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஆதிமூலத்தேவர் அவரது பங்கை கீழராங்கியம் கிராமத்தை சேர்ந்த ராசம்மாள்

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.04.16 14:39:47 +0530

என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ள கிரைய ஆவணம் எண்.1760/1974 ஐ வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டதால் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஆதிமூலத்தேவர் தனக்காகவும், தனது மகள்வழி பேத்தியான இந்த பிரதிவாதி கழுங்காயி என்ற செல்விக்காகவும் என குறிப்பிட்டுள்ளார் என்று பிரதிவாதி தரப்பில் வாதுரை எடுத்துரைக்கப்பட்டது. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் கடந்த 04.04.2014ம் தேதியில் மாண்பமை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் S.A (MD) No.27/2006 Nos மற்றும் 918/2006 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பில் 17வது பாராவில் இந்த நம்பர் பிரதிவாதி ஆதிமூலத்தேவரின் வாரிசு என்பது தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் இறந்துபோன ஆதிமூலம் என்பவரின் வாரிசு சான்றிதழ் என்பதை அறிய முடிகிறது. மேற்படி வாரிசு சான்றிதழில் இந்த நம்பர் பிரதிவாதி செல்வி வாரிசாக காண்பிக்கப்பட்டுள்ளார். அதில் இறந்துபோன மகளின் மகள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் மேற்படி ஆதிமூலத்தின் மனைவியான பொன்னம்மாள் என்கிற இருளாயி என்பவரின் வாரிசு சான்றிதழ் என்பதை அறிய முடிகிறது. அதிலும் இந்த நம்பர் பிரதிவாதி செல்வியை வாரிசாக கண்டு இறந்துபோன மகளின் மகள் என குறிப்பிட்டு வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், கருப்பையா மனைவி க.பிச்சைமுத்து என்பவரின் வாரிசு சான்றிதழ் என்பதை அறிய முடிகிறது. மேற்படி வாரிசு சான்றிதழில் மேற்படி பிச்சைமுத்துவின் கணவர் கருப்பையா என்றும் செல்வி என்பவர் மகள் என்றும் குறிப்பிட்டு இறந்துபோன பிச்சைமுத்துவிற்கு வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் தாவா புல எண்.209/2ன் SLR சான்றிட்ட நகல் என்பதை அறிய முடிகிறது. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில் தாவா புல எண்.209/2 சொத்து SLR காலத்தில் ஆதிமூலம் பெயரில் இருந்து வந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் தாவா புல எண்.209/2ன் அ பதிவேடு சான்றிட்ட நகல் என்பதை அறிய முடிகிறது. பி.வா.சா.ஆ.8 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் தாவா புல எண்.209/2ன் 1381 பசலிக்கான அடங்கல் சான்றிட்ட நகல் என்பதை அறிய முடிகிறது. பி.வா.சா.ஆ.8ம் ஆதிமூலத்தேவரின் பெயரில் இருந்து வருகிறது என்பதை

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.04.16
14:39:51 +0530

அறிய முடிகிறது. பி.வா.சா.ஆ.9 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் தாவா புல எண்.367/14ன் SLR சான்றிட்ட நகல் என்பதை அறிய முடிகிறது. மேற்படி SLR சான்றிட்ட நகலும், ஆதிமூலத்தேவர் பெயரில் இருந்து வந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. பி.வா.சா.ஆ.10 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் தாவா புல எண்.367/14ன் செட்டில்மெண்ட் அ பதிவேடு சான்றிட்ட நகல் என்பதை அறிய முடிகிறது. மேற்படி பி.வா.சா.ஆ.10ம் ஆதிமூலத்தேவர் பெயரில் இருந்து வந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. பி.வா.சா.ஆ.11 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், புல எண்.367/14ன் 1381 பசலிக்கான அடங்கல் சான்றிட்ட நகல் என்பதை அறிய முடிகிறது. மேற்படி பி.வா.சா.ஆ.11 ஆவணமும் ஆதிமூலம் பெயரில் இருந்து வந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் 1972ம் ஆண்டு வரையில் ஆதிமூலம் பெயரில் தான் தாவா சொத்துக்கள் இருந்து வந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. வாதிகள் தரப்பில் குடும்பத்தில் மூத்தவர் என்ற அடிப்படையில் தாவா சொத்துக்களுக்கான வருவாய் ஆவணங்கள் ஆதியில் ஆதிமூலம் பெயரில் இருந்து வந்ததாக தெரிவித்துள்ள நிலையிலும், கடந்த 30.07.1967ம் தேதியில் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் தாவா சொத்துக்கள் இந்த வாதிகளின் தந்தையான சி.ரா.ராமுதேவருக்கு கிடைத்து அன்றே சி.ரா.ராமுதேவர் சுவாதீனம் அடைந்து தனது தனித்த பாத்தியத்தில் வைத்து கடந்த 30.07.1967ம் தேதி முதல் அனுபவித்து வருவதாக சொல்லியுள்ள நிலையிலும், வாதிகளின் தகப்பனாருக்கும் இந்த நம்பர் பிரதிவாதிக்கும் இடையே நடைபெற்ற முந்தைய வழக்கான அ.வ.எண்.32/1999 வழக்கில் இந்த நம்பர் வாதிகளின் தகப்பனார் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகலை பி.வா.சா.ஆ.26 ஆக இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்துள்ளனர். மேற்படி பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.26 ஆனது இந்த நம்பர் வாதிகளின் தகப்பனாருக்கும் பிரதிவாதியின் தாய்வழி தாத்தா ஆதிமூலத்தேவருக்கும் இடையே ஏற்படுத்தி கொண்ட பாகவிஸ்தி என்பதை அறிய முடிகிறது. மேற்படி ஆவண்தத்தை பரிசீலனை செய்கையில் கடந்த 29.07.1974ம் தேதியில் ஏற்பட்ட பாகவிஸ்தி மூலம் தாவா இரண்டு லக்கச் சொத்துக்களும் இந்த நம்பர் பிரதிவாதியின் தாய்வழி தாத்தாவான ஆதிமூலத்தேவருக்கு தாவா சொத்துக்களை கிராமத்தில் அழைக்கப்படும் பெயரை குறிப்பிட்டு ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. அந்தவகையில் எழுத்துமூல பாகவிஸ்தி இருக்கும் போது அதற்கு மாறாக தாவா

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.16 14:39:56 +0530

வழக்கில் வாய்மொழியாக கடந்த 30.07.1967ம் தேதியிலேயே பாகம் ஏற்பட்டதாக சொல்லியிருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்றும் அதனடிப்படையில் தாவா வழக்கு முரண்தடை தோஷத்தால் பாதிப்படைந்துள்ளதாக எழுவினா–3 வாதிகளுக்கு எதிராக தீர்மானிக்கப்படுகிறது.

10) தாவா சொத்துக்களுக்கு வாதிகளின் தகப்பனார் பெயரில் பட்டா பாஸ்புத்தகமும், கணிணி பட்டாவும் வரி ரசீதுகளும் ஏற்பட்டிருந்தாலும், அந்த ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதியின் கூற்றுப்படி யூடிஆர்–ல் ஏற்பட்ட தவறுகையின் காரணமாக ஏற்பட்டுள்ளது என்பதை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது. மேற்படி யூடிஆர் காலத்தில் ஏற்பட்ட தவறுகையை ரத்து செய்ய பிரதிவாதி தரப்பில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடத்தில் ந.க.பி4/2737/2020 ஆக கடந்த 02.06.2020ல் மனு செய்து அதில் கடந்த 17.05.2025ம் தேதியில் வாதிகளின் தகப்பனார் பெயரில் ஏற்பட்ட பட்டாவை ரத்து செய்து தாவா சொத்துக்களுக்கு இந்த நம்பர் பிரதிவாதி பெயரில் தாவா வழக்கிற்கு கட்டுப்பட்டு பட்டா வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேற்படி மாவட்ட வருவாய் அலுவலரின் செயலாணை பி.வா.சா.ஆ.27 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை வழக்கிற்கு பிந்தைய ஆவணம் என்றும், மேற்படி பி.வா.சா.ஆ.27 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும் வாதிகள் தரப்பில் வாதுரை எடுத்துரைக்கப்பட்டது. வழக்கிற்கு பிந்தைய ஆவணமாக இருந்தாலும், அதை நீக்கிவிட்டு பார்க்கும் போது கூட வாதிகளின் தகப்பனார் பெயரில் ஏற்பட்ட வருவாய் ஆவணங்கள் சட்டப்படியான ஆவணங்கள் அல்ல என்ற அடிப்படையில் வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் ஏற்பட்ட மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தரவு இவ்வழக்கை எவ்வகையிலும் பாதிக்கவில்லை என்ற அடிப்படையிலும் பி.வா.சா.ஆ.27 ஆவணமான மாவட்ட வருவாய் அலுவலரின் செயலாணைகளும் அதனடிப்படையில் ஏற்பட்ட பி.வா.சா.ஆ.28 மற்றும் பி.வா.சா.ஆ.29 ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அந்தவகையில் வாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மேற்கோள் காட்டி வாதிட்ட பட்டா தொடர்பான முன்தீர்ப்புகள் தாவா வழக்கு சங்கதிகளோடு பொருந்தி வரவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேற்படி பரிசீலிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்தில் வாதிகள் சட்டப்படியான அனுபவத்தில் இல்லை என்றும் நாளது தேதியில் பிரதிவாதி பெயரில் வருவாய் ஆவணங்கள் இருந்து வருவதால் தாவா சொத்துக்கள் வாதிகளின்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.16 14:40:02 +0530

சட்டப்படியான பாத்தியத்திலும், அனுபவத்திலும் இல்லை என முடிவு செய்து எழுவினா–1 வாதிகளுக்கு எதிராக தீர்மானிக்கப்படுகிறது.

**<u>11) எழுவினா–2</u>**

மேலே விவரிக்கப்பட்ட இருதரப்பு சான்றாவணங்களின் அடிப்படையில் வாதிகள் தாவா சொத்தில் சட்டப்படியான அனுபவத்தில் இருந்து வரவில்லை என்ற அடிப்படையிலும் தாவா சொத்துக்கள் பி.வா.சா.ஆ.26 பாகவிஸ்தி ஆவணத்தின் அடிப்படையில் ஆதிமூலத்தேவருக்கு பாத்தியப்பட்டது என்று நிரூபணமாகியுள்ள நிலையிலும், ஆதிமூலத்தேவரின் மகள்வழி பேத்தி இந்த நம்பர் பிரதிவாதி என்பது பிரதிவாதி தரப்பு ஆவணங்களின் அடிப்படையிலும் முன்தீர்ப்புகளின் அடிப்படையிலும் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் தாவா சொத்தில் வாதிகளுக்கு எவ்வித பாத்திய உரிமையும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அந்த வகையில் வாதிகள் கேட்டுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**<u>12) எழுவினா–4</u>**

மேலே கண்ட எழுவினாக்கள் அனைத்தும் வாதிகளுக்கு எதிராக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், தரப்பினர்களுக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**13) முடிவாக, தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியமானது என்ற விளம்புகை பரிகாரமும், அதன் தொடர்ச்சியாக தாவா சொத்துக்களை இந்த வாதிகள் அமைதியாக அனுபவம் செய்து வருவதை இந்த பிரதிவாதி யாதொரு தடையோ, இடைஞ்சலோ, அக்கிரம பிரவேசமோ செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்து வாதிகளின் தாவா தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் வருடம் ஏப்ரல் மாதம் 16–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.16 14:40:07 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

| 1. வாதிகள் தரப்பு சாட்சிகள் | |
|---|---|
| வா.சா.1 | ராஜாஜி |
| வா.சா.2 | பாலலெட்சுமி (கண்காணிப்பாளர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் மதுரை |
| வா.சா.3 | ஆதிஸ்வரி |

| 2. வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் | |
|---|---|
| வா.சா.ஆ.1 | தாவா சொத்திற்கு 2ம் வாதி தகப்பனார் பெயரில் உள்ள பட்டா புத்தகம் அசல் |
| வா.சா.ஆ.2 | தாவா சொத்திற்கு 2ம் வாதி தகப்பனார் பெயரில் உள்ள கணிணி பட்டா இணையவழி பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.3 | 07.02.2006ம் தேதியிட்ட வாதிகளின் தகப்பனார் பெயரில் உள்ள வரி ரசீது அசல் |
| வா.சா.ஆ.4 | 07.12.2016ம் தேதியிட்ட வாதிகளின் பெயரில் உள்ள வரி ரசீது அசல் |
| வா.சா.ஆ.5 | 20.07.2021ம் தேதியிட்ட வாதிகளின் பெயரில் உள்ள வரி ரசீது அசல் |
| வா.சா.ஆ.6 | 24.08.2022ம் தேதியிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து வாதிகளுக்கு வந்த விசாரணை அறிவிப்பு சார்பு நகல் |
| வா.சா.ஆ.7 | திருமணம் தொடர்பான பதிவுகள் அடங்கிய பக்க நகல் (வரை எண்.155) யை அசலுடன் ஒப்புமை செய்யப்பட்டது. |

| 3. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: | |
|---|---|
| பி.வா.சா.1 | செல்வி |
| பி.வா.சா.2 | அம்பலம் |
| பி.வா.சா.3 | நாகேஸ்வரன் |
| பி.வா.சா.4 | வீரபத்திரன் |

| | |
|---|---|
| பி.வா.சா.ஆ.1 | ஆவண எண்.1760/1974 2ம் வாதி பெரியப்பா கிரையம் கொடுத்த ஆவணம் |
| பி.வா.சா.ஆ.2 | மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் SA (MD) No.27/2006 & 918/2006ல் 04.04.2014ம் தேதியிட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.3 | பிரதிவாதியின் தாயாரை பெற்ற தாத்தாவான ஆதிமூலத்தின் வாரிசுசான்று இணையவழி பதிவிறக்க நகல் |
| பி.வா.சா.ஆ.4 | பிரதிவாதி தாயாரை பெற்ற பாட்டியான பொன்னம்மாள் (எ) இருளாயியின் வாரிசு சான்று இணையவழி பதிவிறக்க நகல் |

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.04.16 14:40:12 +0530

| | |
|---|---|
| பி.வா.சா.ஆ.5 | பிரதிவாதியின் தாயார் பிச்சைமுத்துவின் வாரிசுசான்று சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.6 | புல எண்.209/2ன் எஸ்.எல்.ஆர் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.7 | புல எண்.209/2ன் அ பதிவேடு சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.8 | புல எண்.209/2ன் 1381ம் பசலிக்கான அடங்கல் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.9 | புல எண்.367/14ன் எஸ்.எல்.ஆர் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.10 | புல எண்.367/14ன் அ பதிவேடு சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.11 | புல எண்.367/14ன் 1381ம் பசலிக்கான அடங்கல் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.12 | புல எண்.209ன் புல வரைபடம் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.13 | புல எண்.367ன் புல வரைபடம் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.14 | 06.10.2022ம் தேதியிட்டு சிவகங்கை வருவாய்துறை பொது தகவல் அலுவலர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அனுப்பிய கடிதம் அடங்கிய கோப்பு |
| பி.வா.சா.ஆ.15 | புல எண்.386/4 மற்றும் புல எண்.386/6க்கான செட்டில்மெண்ட் அ பதிவேடு சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.16 | புல எண்.386/4 மற்றும் புல எண்.386/6க்கான செட்டில்மெண்ட் கால அடங்கல் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.17 | 30.05.1972ம் தேதியிட்டு பொன்னம்மாள் (எ) இருளாயி ஆதிமூலத்தேவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி பதிவிறக்க நகல் |
| பி.வா.சா.ஆ.18 | புல எண்.386/6 க்கான யுடிஆர் அ பதிவேடு சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.19 | தாவா சொத்துக்களுக்கான செட்டில்மெண்ட் ஜமாபந்தி விபரம் |
| பி.வா.சா.ஆ.20 | பட்டா எண்.2109ல் 10(1) அடங்கல் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.21 | மேலராங்கியம் புல எண்.429, புல எண்.423க்கான எஸ்எல்ஆர் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.22 | மேலராங்கியம் புல எண்.429/2க்கான அ பதிவேடு சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.23 | 05.07.1977ம் தேதியிட்டு ஆதிமூலத்தேவர் கணேசத்தேவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.24 | மேலராங்கியம் புல எண்.261/2க்கான எஸ்எல்ஆர் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.25 | மேலராங்கியம் புல எண்.261/2க்கான அ பதிவேடு சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.26 | 29.07.1974ம் தேதியிட்ட பாகவிஸ்தி ஆவணம் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.27 | கடந்த 17.05.2025ம் தேதியிட்ட மாவட்ட வருவாய் அலுவலரின் செயல் ஆணைகள் அசல் |
| பி.வா.சா.ஆ.28 | கடந்த 16.06.2025ம் தேதியிட்ட தாவா 2 இலக்க சொத்துக்கான தற்போதைய கணிணி பட்டா எண்ணிக்கை –2 |
| பி.வா.சா.ஆ.29 | கடந்த 16.06.2025ம் தேதியிட்ட 1434ம் பசலிக்கு தாவா 2ம் இலக்க |

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.04.16 14:40:18 +0530

| | |
|---|---|
| | சொத்திற்கு பிரதிவாதி பெயரில் செலுத்திய நிலவரி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.30 | திருக்கோவில் அலுவலகத்தில் வழங்கப்பட்ட கடிதம் |
| பி.வா.சா.ஆ.31 | பொது தகவல் அலுவலருக்கு 30.12.2022ல் அனுப்பிய ஆட்சேபனை குறித்த ஆவணம் |

**<u>4) சாட்சி சான்றாவணங்கள்:</u>**

| | |
|---|---|
| சா.சா.ஆ.1 | வீரபாண்டியன் கட்டபொம்மன் நாடகத்தின் அழைப்பிதழ் அசல் |
| சா.சா.ஆ.2 | பூவந்தி காவல் வட்ட ஆய்வாளர் அவர்கள் வழங்கிய அனுமதிக்கான செயல்முறை ஆணையின் அசல் |
| சா.சா.ஆ.3 | மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை W.P.MD. No.5855/2023ல் மாண்புமிகு உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரையின் இணையதள பதிவிறக்க நகல் |
| சா.சா.ஆ.4 | OS NO.32/1999 வழக்கின் வாதிகளின் தந்தை சி.ரா.ராமுத்தேவர் அளித்த PW1 சாட்சியின் வாக்குமூலத்தின் சான்றிட்ட நகல் |
| சா.சா.ஆ.5 | மானாமதுரை சார்பு நீதிமன்ற AS No.138/2019 வழக்கின் தீர்ப்புரை சான்றிட்ட நகல் |
| சா.சா.ஆ.6 | சர்வே எண் விஸ்தீரணம் நான்குமால் பற்றிய விபரங்கள் அடங்கிய தகவல் ஆவணம் |
| சா.சா.ஆ.7 | 01.01.2024 அன்று தன் சகோதரர் கருப்பையா இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் |

| |
|---|
| 5. நீதிமன்ற சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.16 14:40:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்
அசல் வழக்கு எண்.7/2023
தீர்ப்புரை
வரைவு/சீரான
நாள்:16.04.2026